**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண். 66/2010</u>

நாள் 23.02.2023

<u>பெயர். செல்வம் த/பெ. முனுசாமி</u>

<u>வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

1. வழக்கு சொத்து சர்வே எண் 127/1 விஸ்தீரணம் 2 ஏக்கரா மற்றும் கிணர் உட்பட என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.127/1 ஆனது என் தந்தை முனுசாமி மற்றும் குப்புசாமி ஆகியோருக்கு உரிமையானது என்றால் சரிதான். 9.3.1962 பாக பிரிவினை பத்திரத்தின் முன்னிலையில் முனுசாமியும் மற்றும் குப்புசாமியும் மேற்படி சர்வே எண் 127/1 நிலத்தையும் மற்றும் வீட்டையும் பாக பிரிவினை செய்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

2. மேற்படி 9.3.1962 பாக பிரிவினை பத்திரத்தின்படி மேற்படி சர்வே எண் 127/1 நிலத்தில் முனுசாமிக்கு வடக்கு பக்கம் பாதியும் குப்புசாமிக்கு தெற்கு பக்கம் பாதியும் கிணற்றில் இருவருக்கும் பொதுவில் பாகமாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பாக பிரிவினைக்கு பிறகு முனுசாமியும் மற்றும் குப்புசாமியும் அவரவர் பாகத்தை தனிதனியாக அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான்.

3. 4.6.1962 கிரய பத்திரத்தின்படி குப்புசாமியும் மற்றும் அவரது வாரிசுகளும் சர்வே எண் 127/1ல் அவர்களுக்கு உரிமையான தெற்கு பக்கம் பாதியை கிருஷ்ணன் என்பவருக்கு கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். 11.4.1964 ம் தேதி அன்று மேற்படி தெற்கு பக்கம் பாதியையும் மற்றும் கிணற்றில் பாதியையும் கிருஷ்ணன் ஒரு பாக்கியம்மாள் என்பவருக்கு கிரயம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான்.

4. மேற்படி 9.3.1962 பாகபிரிவினை பத்திரம், 4.6.1962 மற்றும் 11.4.1964 ஆகிய கிரய பத்திரங்களை நான் எனது வழக்கில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன். நான் எனது வழக்கில் வாய்மொழி பாகமாக தான் முனுசாமி மற்றும் குப்புசாமிக்கு ஆகியோருக்கு பாகம் எற்பட்டதாக சொல்லி உள்ளேன் என்றால் சரியல்ல.

5. சோமசுந்தரம் என்பவர் என் அப்பாவின் அக்கா மகன் என்றால் சரிதான். 30.1.1966ம் தேதி அன்று பாக்கியம்மாள் சோமசுந்தரத்திற்கு கிரயம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி 30.1.1966 தேதியிட்ட கிரய பத்திரத்தை வா.சா.ஆ.1 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய பத்திரம் ரூ.5000/-க்கு எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல ரு.4250/-க்கு எழுதி கொடுக்கப்பட்டது. சர்வே எண் 127/1 தெற்கு பக்கம் உள்ள சொத்து வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் மூலமாக சோமசுந்தரத்திற்கு உரிமை உடையது என்றால் சரியல்ல.

6. சர்வே எண் 127/1 தெற்கு பக்கம் குப்புசாமிக்கு பாகமாக வந்த சொத்து என் தந்தை முனுசாமிக்கு உரிமை உடைய சொத்து ஆகும். சர்வே எண் 127/1 குப்புசாமிக்கு பாகமாக வந்த சொத்து என் தந்தைக்கு உரிமையானது என காண்பிக்க என்னிடம் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல வா.சா.ஆ.1 லேயே குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் பாக்கியலட்சுமியின் மருமகன் ராமகவுண்டர் மூலமாக பாக்கியம்மாளுக்கு சேர்ந்த ரூ.500/- என்றும் பத்திர ரிஜ்ஸ்டர் காலத்தில் பாக்கியம்மாள் சோமசுந்தரத்திற்கு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல என் தந்தை தான் கொடுத்தார்.

7. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தில் தங்களிடம் என குறிப்பிடபட்டுள்ளது தங்களிடம் வாங்கிய பணத்தை தான் குறிப்பிடப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தின்படி சோமசுந்தரம் தான் சர்வே 127/1 தெற்கு ப்க்கம் உள்ள சொத்தை அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. பட்டா எண்.60ல் முனுசாமி பெயருடன் சோமசுந்தரம் பெயரும் சேர்ந்து இருந்தது என்றால் சரியல்ல. சோமசுந்தரம் இறந்து விட்டார் என்றால் அவரது முதல் மகன் தான் 1ம் பிரதிவாதி என்றாலும் சரிதான்.

8. யுடிஆர் பட்டாவில் சோமசுந்தரம் பெயர் விடுபட்டுவிட்டது என்றால் சரியில்ல. சோமசுந்தரத்தின் மகன் முதல் பிரதிவாதி பட்டாவில் பெயர் சேர்க்க மனு கொடுத்துள்ளார் என்றால் இறந்த சோமசுந்தரத்தின் பெயரில் பட்டாவில் சேர்க்க மனு கொடுத்த விவரத்தை தெரிந்து கொண்டேன். திருவண்ணாமலை மாவட்ட வருவாய் அலுவலர் 8.12.2009ம் தேதி அன்று சோமசுந்தரத்தின் பெயரை பட்டா எண் 631ல் சேர்க்க சொல்லி உத்தரவு போட்டுவிட்டார் என்றால் சரிதான் ஆனால் விசாரணை எதுவும் நடக்கவில்லை.

9. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவுபடி சோமசுந்தரத்தின் பெயர் பட்டா எண் 631ல் சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 8.12.2009 அன்று போடப்பட்ட உத்தரவு எனக்கு 2011ம் வருடம் தான் விவரம் தெரிந்தது. மேற்படி பட்டா விவரம் தெரிந்த பிறகு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். நான் மேல்முறையீட்டுக்காக எடுத்ததில் ஏதேனும் உத்தரவு பிறப்பிக்கப்ட்டதா என்றால் இதுவரை இல்லை.

10. நான் மேற்படி மேல்முறையீட்டில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்ததால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மாவட்ட வருவாய் அலுவலர் போட்ட உத்தரவை ரத்து செய்ய கோரி மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞரை தான் கேட்கனும்.

11. 4 முதல் 7 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியிடம் இருந்து சர்வே எண் 127/1ல் 99 சென்ட் நிலமும் 2 சென்ட் கிணறும் கிரயம் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதி விற்றுவிட்டார். 4 முதல் 7 பிரதிவாதிகள் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் வாங்கியதால் தான் அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவர்களும் சொத்தை தற்போது விற்று விட்டார்கள்.

12. 4 முதல் 7 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய பத்திரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். 4 முதல் 7 பிரதிவாதிகள் கிரயம் வாங்கிய விவரத்தை எனது வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல சொல்லி உள்ளேன். 4 முதல் 7 பிரதிவாதிகளின் பெயர்களை பட்டா 631ல் சேர்த்துள்ளார்கள். என்னை எதுவும் விசாரணை செய்யாமல் உட்பிரிவும் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்ட பிறகு 4 முதல்7 பிரதிவாதிகளின் பெயர்கள் பட்டா எண் 1369 சர்வே எண் 127/1 பி என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விசாரணை செய்யாமல் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.

13. அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டதற்கு நடவடிக்கை ஏதேனும் எடுத்தேனா என்றால் எடுத்தேன். 2.9.2009 ம் தேதி அன்று எனக்கும் என் தங்கை, மற்றும் என் தாயாருக்கும் சேர்த்து உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலை தவிர வேறு எந்த உயிலும் எங்களுக்கு எழுதி வைக்கவில்லை. வா.சா.ஆ.14 உயிலில் அ அட்டவணை என காண்பிக்கப்பட்டுள்ள தெற்கு பகுதி தான் இவ்வழக்கு சொத்து என்றால் சரிதான். அதே போல் ஆ அட்டவணை என்பது வடக்கு பகுதி என்றால் சரிதான்.

14. வா.சா.ஆ.14 உயிலில் அ அட்டவணை சொத்து என் தாயாரின் காலத்திற்கு பிறகு அவர்களது மகள்கள் அடைய வேண்டும் என தந்தை உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அதே போல் ஆ அட்டவணை சொத்து நான் அடைய வேண்டும் என்று எழுதி உள்ளது என்றால் சரிதான். என் தந்தை முனுசாமி உரிமையில்லாத சொத்தை வா.சா.ஆ.14 உயிலில் அ அட்டவணை சொத்தாக காணபித்து ஒரு ஆவணம் ஏற்படுத்த வேண்டும் என உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல.

15. 10.3.2010 ஆம் தேதி வாதிகள் 2 முதல் 5 வாதிகள் ஒரு செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி உயில் மற்றும் செட்டில்மென்ட் ஆவணத்தை முனுசாமிக்கு வழக்கு சொத்தில் உரிமை இருக்கிறது என்பதை காண்பிக்க ஏற்படுத்தி இருக்கிறோம் என்றால் சரியல்ல.

16. தாவா கிணற்றில் 1990ம் ஆண்டு போர்வெல் போட்டேன். மேற்படி போர்வெல் நான் பொது கிணற்றில் போட்டேன் என்றால் சரியல்ல அது எங்களுடைய கிணறு ஆகும். சர்வே எண் 127/1ல் பொது கிணறு இருக்கிறதா என்றால் இல்லை. மேற்படி சோமசந்தரம் கிரயம் வாங்கியதற்கு என் தந்தை தான் பணம் கொடுத்தார். அதனால் கிணர் ஆனது எங்களுக்கு உரிமையானது. 1966ல் வருடத்தில் இருந்து பொது கிணறு தனி கிணராக மாறிவிட்டது.

17. 1966ம் ஆண்டு முனுசாமி பெயரில் மேற்படி கிரயம் தனிப்பட்டு எழுதப்பட்டதா என்றால் இல்லை, நாமகர்த்தாவாகதான் எழுதப்பட்டது. தனிப்பட்ட முறையில் இருந்ததால் தான் நான் போர்வெல் போட்டு கொண்டேன். போர்வெல் போட்டதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

நான் போர்வெல் போட்டதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 1988ம் ஆண்டில் இருந்து கிணற்றை ஆழப்படுத்தி சீா்ப்படுத்தி இருக்கிறேன் அதற்கு ரூ 60000/- செலவாகி இருக்கிறது.

18. ரூ.60000/- செலவு செய்ததற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி நாமகா்த்த கிரயம் என்பது சோமசுந்தரத்திற்கும் பாக்கியம்மாளுக்கும் தான் பொருந்தும் என்றாலும் பாக்கியம்மாளுக்கும் முனுசாமிக்கும் பொருந்தாது என்றால் சரியல்ல. என் தந்தை நெருங்கிய உறவினா் என்பதாலும் சோமசுந்தரத்தின் நிலத்தை அனுபவித்து வந்தேன் என்றாலும் சரியல்ல.

19. வழக்கு சொத்தில் எனக்கு உரிமையும் அனுபவ பாத்தியமும் உள்ளது. நான் அனுபவ பாத்தியம் என எனது வழக்கில் சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் ஆட்சேபித்து வருவாய் துறைக்கு அனுப்பிய மனுக்கள் எந்த வகையிலும் இவ்வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. ஆம்பூா் சா்க்கரை ஆலையில் இருந்து வழங்கப்பட்ட ஆவணங்களில் எந்த சா்வே எண் என குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல அதில் விஸ்தீரணம் குறிப்பிடப்பட்டுள்ளது.

20. வா.சா.ஆ.31 முதல் 42 வரை ஆவணங்கள் எனது தகப்பனாா் வருவாய் துறையினருக்கும் காவல்துறையினருக்கும் அனுப்பியது என்றால் சரிதான். மேற்படி என் தந்தை கொடுத்த மனுக்கள் விவரம் எனக்கு நேரடியாது என்றால் தெரியும். மேற்படி என் தந்தை கொடுத்த அசல் மனுக்களை அந்தந்த அதிகாரிகளிடம் இருந்து வரவைக்கவில்லை என்றால் சரியல்ல அசல் மனுக்களை தான் தாக்கல் செய்துள்ளேன்.

21. வா.சா.ஆ. 43 முதல் 48 வரை ஆவணங்கள் நான் வருவாய் துறை அதிகாிகளுக்கு அனுப்பிய மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் மேற்படி அவ்வாறு அனுப்பிய அசல் மனுக்களை அதிகாரிகளிடம் இருந்து வரவைக்காமல் எனது கையிருப்பில் இருந்த காப்பியை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.49 வில்லங்கசான்று எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் பெயரில் இருப்பதால் தாக்கல் செய்துள்ளேன்.

22. வா.சா.ஆ.51 முதல் 61 வரை ஆவணங்கள் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி ஆவணங்கள் பரிவர்த்தனை நடைபெற்று உள்ளது அதில் ஜக்பந்தியில் எங்கள் நிலங்களை காண்பித்துள்ளார்கள் அதை எங்கள் அனுபவத்தை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஜக்பந்தியில் என் தந்தை முனுசாமி பெயரில் வருகிறது. அதில் சர்வே எண் சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லவில்லை. மேற்படி ஜக்பந்தியில் முனுசாமி பெயரை குறிப்பிடுவது சர்வே எண் 127/1 வடபகுதியை தான் குறிக்கும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.51 முதல் 61 வரை ஆவணங்கள் வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என்பதை காண்பிக்காது என்றால் சரியல்ல காண்பிக்கும்.

23. மேற்படி வா.சா.ஆ. 60 கிரய பத்திரமானது வமழக்கு தாக்கல் செய்துவிட்ட பிறகு 4 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களின் வாரிசுகளுக்கு எழுதிவைக்கப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். மேற்படி வாரிசுதாரர்களை தரப்பினர்களாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி வாரிசுதாரர்களுக்கு ஏற்பட்ட ஆவணமானது 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு உரிமையில்லை எப்போதும் மறுக்காது என்றால் சரியல்ல. சர்வே எண் 127/1ல் தெற்கு பாதி சொத்து என் தந்தையாருக்கும் என் தாயாருக்கும் எனக்கும் என் சகோதரரிகளுக்கும் எந்தவிதமான உரிமையும் எற்படாது என்றால் சரியல்ல.

24. மேற்படி சொத்திற்கும் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் பிரதிவாதிகளுக்கு தொல்லை கொடுக்கவேண்டும் என்பதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிகளுக்கு நஷ்ட ஈடு கொடுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.